# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 250/மா/2023**
**நாள் : 26.09.2023**

திரு. M. ரவிசங்கர்,
சென்னை- 600 028. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் -9, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மந்தவெளிபாக்கம், பாரதி நகர், எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. ரவிசங்கர் என்பவரின் 04.08.2023 நாளிட்ட மனு 07.08.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 250/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, மந்தவெளிபாக்கம், பாரதி நகர், எண்.23 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. ரவிசங்கர் என்பவரின் முறையீட்டு மனுவில்,

மேற்கண்ட விலாசத்தில் வசிக்கும் நான் தகவல் பெறும் உரிமை சட்ட ஆர்வலர் அட்வகேட்டாக, பத்திரிகை ஆசிரியராகவும் சென்னை மாவட்டம் மயிலாப்பூர் பகுதியில் செயல்படுகிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை, மண்டலம்–9, வார்டு 123, பகுதி-25, எண்.83, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4, காமதேனு திரையரங்கம் எதிரில் அமைந்துள்ள ராமகிருஷ்ணா ஹோட்டல் பொது மக்களுக்கு இடையூறாக நடைபாதையில் நடுவில் உணவு கூடாரத்தை வைத்து சமைப்பதும் அதிலிருந்து வெளியாகும் உணவு திண்பண்ட கழிவுகளை மழைநீர் வடிகால்வாய் பாதையில் விடுவதையும் தடுக்க தமிழக முதல்வரிடம் இணையதள வழியாக புகார் பதிவு செய்தேன். ஆனால் சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள உதவிப்

பொறியாளர் AE அவர்கள் தீய நோக்கத்துடன், நடவடிக்கை எடுக்காமல் பொய்யான தகவலை இணையதளத்தில் நடவடிக்கை எடுத்துள்ளதாக பதிவு செய்து ஆக்கிரமிப்புக்கு துணை போக மறைமுகமாக உதவி செய்து வருகிறார் என்பது உண்மை. எனினும் Geogle Time Location Map Photos புகைப்படங்கள் அனைத்தும் இணைத்துள்ளேன். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது புகைப்படமே ஒரு சாட்சி. சிங்காரச் சென்னை எனும் அழைக்கப்படும் ஸ்மார்ட் சிட்டி பகுதியில் பொது மக்களுக்கு இடையூறாக நடைபாதை வியாபாரிகள் வணிக நோக்கத்துடன் தீய எண்ணத்துடன் நடைபாதைகளை ஆக்கிரமிப்பு செய்து, முதியோர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும், கர்ப்பிணி பெண்களுக்கும் இடையூறு ஏற்படுத்தி வருதைத் தொடர்ந்து தங்களிடம் பணிந்து புகாரை சமர்ப்பிக்கிறேன்.

மேற்படி தாங்கள் இதனை நேரடியாக விசாரணை செய்து பொதுமக்களுக்கு இடையூறு செய்து வரும் ராமகிருஷ்ணா ஹோட்டல் உரிமையாளர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு உணவு கூடாரத்தை அகற்றி பொதுமக்கள் நடைபாதையில் எந்தவித மன உளைச்சல் இன்றி பயன்பாட்டிற்கு கொண்டு வர தங்கள் மேலான உத்தரவை வழங்க வேண்டுகிறேன்.

பொது மக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது இடையூறு ஏற்படுத்தும் கட்சி அல்லது அமைப்பை சார்ந்த ராமகிருஷ்ணா ஹோட்டல் உரிமையாளர் எவராக இருப்பினும் மக்களைக் காக்க உதவி பதிவாளர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், தனது இரும்பு கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க அன்புடன் வேண்டுகிறேன்.

தவறான தகவலை வழங்கி மன உளைச்சல் ஏற்படுத்தி வந்த பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளர், தேனாம்பேட்டை, மண்டலம்-9, வார்டு -123, பகுதி-25 அவர்களை நேரடியாக விசாரணை செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய உத்தரவு வழங்க மீண்டும் பணிவுடன் வேண்டுகிறேன்.

**2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 5.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 5.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் உள்ள நடைபாதையை ஆக்கிரமித்து வியாபாரிகள் கடைகளை நடத்தி வருகின்றனர். மேற்கண்ட அங்கீகாரமற்ற கடைகள் மாநகராட்சி ஊழியர்களுக்கே தெரிந்தே அவர்களின் உதவியுடன் நடந்துவருகிறது. சுமார் 15 அடி அகலமுள்ள மேற்கண்ட நடைபாதையை வியாபாரிகள் ஆக்கிரமித்து கடைகளை நடத்தி வருவதால் அந்நடைபாதையை பொது மக்கள் அதாவது வயோதிகர்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் உபயோகப்படுத்திட மிகவும் சிரமப்படுகின்றனர். பொது மக்கள் பயன்படுத்தும் நடைபாதையில் உணவகங்களை வைத்துள்ள வியாபாரிகள் அங்கு சேரும் கழிவு நீரை மழை நீர் வடிகால் பாதையில் வெளியேற்றி வருகின்றனர். மேலும்

மேற்கண்ட நடைபாதைகளில் உள்ள ஒரு சில கடைகளில் "கடைகள் வாடகைக்கு விடப்படும்" என விளம்பரப் பலகை வைத்துள்ளனர். இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியில் புகார் மனுக்கள் அனுப்பியதில், அங்குள்ள வியாபாரிகள் Vending Zone–ல் கடைகளை வைத்துள்ளதாகவும், அவற்றை அகற்ற இயலாது என இல்லாத இடத்தை குறிப்பிட்டு பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் பதில் அளித்துள்ளனர்.

எனவே, சென்னை லஸ் சர்ச் ரோடில் உள்ள நடைபாதையில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் நடைபெறும் கடைகளை அகற்றி அங்கு பொதுமக்கள் சிரமமின்றி நடமாட மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9 உதவிப் பொறியாளர் அவர்கள் 5.9.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் உள்ள நடைபாதையில் உள்ள கடைகளை நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அங்குள்ள கடைகள் சென்னை உயர் நீதிமன்றத்தின் 22.11.2016 உத்தரவின்படி (W P No. 40992 of 2016 and W M P No. 34988 of 2016) அமைக்கப்பட்ட குழுவினால் லஸ் சர்ச் ரோடில் உள்ள நடைபாதையை Vending Zone என அங்கீகரித்து, அங்கு கடைகள் வைக்க மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டது. அதன்படி அங்கு 166 கடைகள் உள்ளன. மேற்கண்ட நடைபாதையில் உள்ள கடை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, கடைகள் நடத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களில் உள்ள கடைகள் மாநகராட்சி vending zone பகுதிக்குள் அமைந்துள்ளது. இக்கடைகளை vending committee மூலம் அகற்றப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கடைகளினால் மாநகராட்சிக்கு எவ்வித வருமானமும் கிடைக்கவில்லை. தற்போது சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தினரும், பெருநகர சென்னை மாநகராட்சியும் சேர்ந்து அங்குள்ள கடைகளுக்கு பதிலாக மாற்று இடம் அளித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 9ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன :**

மனுதாரர் பெரு நகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலம் 9 வார்டு 123ல் லஸ் சர்ச் ரோடு மயிலாப்பூரில் அமைந்துள்ள ராமகிருஷ்ணா ஹோட்டல் உரிமையாளர் நடைபாதையை

ஆக்கிரமித்து சமையல் செய்து பொதுமக்கள் நடப்பதற்கு இடையூறாக செயல்படுகிறார் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், எனவே நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், மாநகராட்சி அலுவலவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள லஸ் சர்ச் சாலையின் நடைபாதையில் உள்ள கடைகள் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி Vending Committee ஆல் vending zone என அங்கீகரிக்கப்பட்டு அங்கு கடைகள் நடத்திட மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி 166 கடைகள் உள்ளன என்றும் அக்கடை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களில் உள்ள கடைகள் மாநகராட்சி vending zone பகுதிக்குள் அமைந்துள்ளது என்றும், மேலும் அக்கடைகள் vending committeeன் மூலம் அகற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும், அக்கடைகளால் மாநகராட்சிக்கு எவ்வித வருமானமும் கிடைக்கவில்லை என்றும், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தினரும், பெரு நகர சென்னை மாநகராட்சியும் இணைந்து அங்குள்ள கடைகளுக்கு மாற்று இடம் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பெரு நகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் அலுவலர்கள், லஸ் சர்ச் சாலையில் கடைகள் வைத்துள்ள வியாபாரிகள் vending zoneல் வைத்துள்ளதாகவும் அவற்றை அகற்ற இயலாது என இல்லாத இடத்தை குறிப்பிட்டு பதில் அளித்துள்ளனர் என்றும், மேற்கண்ட நடைபாதைகளில் உள்ள ஒரு சில கடைகளில் "கடைகள் வாடகைக்கு விடப்படும்" என விளம்பரபலகை வைத்துள்ளனர் என மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையின் நடைபாதையில் vending committeeயால் அங்கீகரிக்கப்பட்டு அங்கு கடைகளை அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பெரு நகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9ன் உதவிப் பொறியாளர் தெரிவித்து இருக்கும் நிலையில், மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களை பார்க்கும்போது முழு நடைபாதையையும் ஆக்கிரமித்து கடைகள் நடத்துவது தெளிவாகிறது. லஸ் சர்ச் சாலையை பயன்படுத்துவோர் எவ்வாறு இடையூறு இல்லாமல் மேற்படி கடைகளை கடந்து செல்ல இயலும். மேலும், லஸ் சர்ச் பிரதான சாலையில்தான் பொதுமக்கள் நடமாட வேண்டிய சூழ்நிலை எற்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி சென்னையில் ஆங்காங்கே "நடைபாதை நடப்பதற்கே" என்ற பெயர் பலகை வைப்பதன் நோக்கம் பயனற்றதாகிவிடும் என்று இம்முறை மன்றம் சுட்டி காட்ட விரும்புகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் உதவிப் பொறியாளர் மேற்குறிப்பிட்ட சாலையில் உள்ள கடைகள் vending zone பகுதியில் உள்ளது என்று தெரிவித்த நிலையில், மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்களை பார்க்கும்போது உண்மையிலேயே மேற்கண்ட சாலையில் உள்ள கடைகள் vending zone பகுதியில் தான் உள்ளதா என்ற சந்தேகம் எழுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு vending zoneன் பகுதியில் அமைந்துள்ளது என்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9ன்

அலுவலகத்தால் எவ்வித ஆதாரத்தினையும் இம்முறைமன்றத்தின் முன் அளிக்கவில்லை. மேலும், அச்சாலையில் உள்ள கடைகளால் எவ்வித வருமானமும் பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு வரவில்லை என்று உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்த நிலையில், மனுதாரர் அங்குள்ள கடைகளில் "வாடகைக்கு கடைகள் விடப்படும்" என்ற பலகை இருக்கிறது என்று வாக்குமூலத்தில் தெரிவித்து இருப்பதும், vending zone பகுதியில் உள்ள கடைகளின் உண்மைத் தன்மை கேள்விக் குறியாக உள்ளது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

The Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending ) Scheme and Rules, 2015 provides as follows: –

<u>விதி 9</u> **Vending Fees:** The vending fees for various categories of vendors shall be as mentioned in the table below :

| Sl.No. | Category of street vendors | Area | Vending fee |
|---|---|---|---|
| 01 | Stationery vendor (Full time) | Upto 10 sq.ft | 1% of the Guideline value subject to minimum of Rs.750/- per annum |
| | | From 10 to 25 Sq.ft | 2% of the Guideline value subject to a minimum of Rs.1500/- per annum |
| | | More than 25 Sq.ft | 3% of the Guideline value subject to a minimum of Rs.3000/- per annum |
| 02 | Stationery Vendor (Part time or time sharing) | Upto 10 sq.ft | 0.5% of the Guideline values subject to a minimum of Rs.375/- per annum |
| | | From 10 to 25 Sq.ft | 1.0% of the Guideline value subject to minimum of Rs. 760/- per annum |
| | | More than 25 Sq.ft | 1.5% of the Guideline value subject to a minimum of Rs.1500/- per annum |
| 03 | Mobile Vendor(with motor vehicle) | Upto 10 sq.ft | Rs.750/- per annum |
| | | From 10 to 25 Sq.ft | Rs.1500/- per annum |
| | | More than 25sq.ft | Rs.3000/- Per annum |
| 04 | Mobile Vendor (vehicle without motor) | Upto 10 sq.ft | Rs.375/- per annum |
| | | From 10 to 25 Sq.ft | Rs.750/- per annum |
| | | More than | Rs.1500/- per annum |

| | | | |
|---|---|---|---|
| | | 25sq.ft | |
| 05 | Mobile Vendor (headloads) | | Rs.250/- per annum |

**Rule 10–16:** x x x x

**Rule 17:** Maintenance of cleanliness and charges payable to the Local Authority:

(1) Every Street vendor shall be responsible for the cleanliness of the immediate surroundings of the area allocated to the vendors in a vending zone.

(2) Every street vendor shall collect and deposit the waste generated by his business as instructed by the local authority.

(3) Every street vendor shall remit the vending fee specified in clause 9, every year as decided by the local authority

(4) Every street vendor shall also remit the maintenance charges to the local authority concerned as and when the same is levied from the other shops.

மேற்கண்ட விதிகளின்படி street vendors உள்ளாட்சி அமைப்புக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், பெரு நகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9ன் உதவிப் பொறியாளர் vending zone ஆக அங்கீகரிப்பட்ட லஸ் சர்ச் சாலையில் உள்ள கடைகளால் வருமானம் ஏதும் இல்லை என்று தெரிவித்திருப்பது மேற்கண்ட சட்டவிதிகளுக்கு முரணாக உள்ளதாக இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், பெருநகர சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-9ன் அலுவலகத்தால் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(a) Street Vending Committee அமைத்ததற்கான மாமன்ற தீர்மானம்.

(b) பெருநகர சென்னை மாநகராட்சியினால் Street Vending Committee அமைந்தற்கான அறிவிக்கை (Gazatte Notification)
Street Vendor Committee-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட Street Vending Zone பற்றிய விவரம்.

(c) Street Vending Zone–ல் வரையறுக்கப்பட்ட தெருக்கள் மற்றும் கட்டணம் குறித்த ஆவணம்.

(d) விதி 17ன்படி Street vendorsயிடமிருந்து SUC எவ்வளவு கட்டணமாக வசூலிக்கப்பட்டது என்ற விவரம் பட்டியல்

மேலும், சென்னை மைலாப்பூரில் உள்ள லஸ் சர்ச் சாலையில் மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள கடையானது Street Vending Zone-ல் அமைந்திருக்குமேயானால் Street vendors-ன் கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்யாமல், வருமான இழப்பு ஏற்படுத்தியமைக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் அலுவலர்களே முழு

பொறுப்பாளர்கள் என்றும் இது சம்பந்தமாக எவ்வித கோப்புகளோ, ஆவணங்களோ சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு இது குறித்த எவ்வித புரிதலும் மாநகராட்சி அலுவலர்களுக்கு இல்லை என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்டுவதோடு தனது கடும் அதிருப்தியை பதிவுசெய்கிறது.

2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பாக

<u>பிரிவு 7:</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

பெருநகர சென்னை மாநகராட்சி, மயிலாப்பூரில் உள்ள லஸ் சர்ச் சாலை vending zone ஆக அங்கீகரிப்பட்டுள்ளது என்று தெரிவித்து இருப்பினும், லஸ் சர்ச் சாலையின் நடைபாதை முழுமையாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கடைகள் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ள நிலையில் அதிகப்படியான ஆக்கிரமிப்புகளை அகற்றிட தவறியும், மேலே குறிப்பிட்டுள்ள சட்ட பிரிவு மற்றும் விதிகளை பின்பற்றாத பெருநகர சென்னை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 45 தினங்களுக்குள் அறிக்கையை இம்முறை மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையின் vending zone-ஆக அங்கீகரிக்கப்பட்ட நடைபாதையில் உள்ள கடைகளுக்கு, மெட்ரோ இரயில் நிர்வாகத்தினரும், பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து, மாற்று இடம் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-9ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, அதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -9ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Assistant Engineer and field officials concerned have defaulted in taking action against the encroachments as pointed out by the petitioner. The Assistant Engineer could not definitely disclose whether the shops/hotels as indicated by the petitioner with photographic evidence come under vending zone permitted by the Greater Chennai Corporation. If pavements and platforms could be converted into vending zones, then how would the pedestrian public walk on the pavements safely? It

is a clear case of sheer evasion, dodging and not doing the duties by the field official delinquents of the zone. The Greater Chennai Corporation Commissioner is directed to initiate disciplinary action against the Assistant Engineer and other officials responsible for this violation of permitting encroachments and causing damages to the image of the Greater Chennai Corporation. A copy of the order is sent to Government in MAWS for information.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. M. ரவிசங்கர்,
   எண்.23, பாரதி நகர்,
   மந்தவெளிபாக்கம்,
   சென்னை – 600 028.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.4, 4வது குறுக்குத் தெரு,
   லேக்-வியூ ரோடு, நுங்கம்பாக்கம்,
   சென்னை - 600 034.
4. துணை ஆணையர் (Town Planning)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. அரசு முதன்மைச் செயலாளர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை /
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்